ஒரு முதல் நிலை அறிக்கை வெளியிட்டு அது குறித்து ஆலோசனைகளைப் பெற்று அவற்றைப் பரிசீலித்து அதன் பின் முதல் நிலை அறிக்கையை முடிவு செய்வது என்பது மற்றொரு முறை. அதாவது அறிவிப்பு முறை என்றும் குறிப்பிட்டேன். தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்கக் குழு அமைத்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க காலதாமதம் ஆகும் என்பதால் ஊதிய விகிதங்களை அறிக்கை முறையில் திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று குறிப்பிட்டேன்.

அந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்க ஒரு முதல்நிலை அறிக்கை வெளியிடும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் நான் கோவில்பட்டி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழில்களைச் சார்ந்த தொழில் அதிபர்கள் என்னைச் சந்தித்து மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமான ஊதிய விகிதங்களும் அகவிலைப் படி விகிதங்களும் உள்ளன என்று முறையிட்டனர். அவர்கள் கொடுத்த மனுவை தொழிலாளர் நல ஆணையாளரிடம் தந்து இதைப்பற்றி விசாரிக்க சொன்னபோது, அவரும் அங்கே இருக்கின்ற தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் அதுபற்றி ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக அறிந்தேன். நேற்றைக்கு நான் இதை உரிமை மீறல் பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் இங்கே எழுப்பப் போகிறேன் என்று சொன்னபோது, இல்லை, ஏற்கெனவே தங்களிடம் சொன்னது போல அறிக்கை முறையிலேயே ஊதிய விகிதம் நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை அவரிடம் சொன்னேன். அவரும் இதுபோல ஓர் அறிக்கையை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் ஆணையாளர் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தக் கடிதம் ஒரு தொழில் குழுவை ஏற்படுத்தி, அதில் இருக்கின்ற சங்கடங்களை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் அது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு விரைவில் தீப்பெட்டி தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

காமராசர் மாவட்டத்திற்கென்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப் படாததால் அப்பகுதி மக்களின் நிலை குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராசர் மாவட்டத்திற்கு என்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாததால் அப்பகுதி மக்களின்

நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1984-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாக பின்வருமாறு பிரித்து அரசு ஆணையிட்டது :

மாவட்டம். (1)	தலைமையிடம். (2)
(1) இராமநாதபுரம்	இராமநாதபுரம்.
(2) பசும்பொன் தேவர் திருமகன் ..	சிவகங்கை.
(3) காமராசர்	விருதுநகர்.

அரசு புதிதாக தோற்றுவித்த மாவட்டங்களுக்கென மத்தியக் கூட்டுறவு வங்கிகள் போன்ற மைய கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான முன்மொழிவுகளை அனுப்பும்படி கோரியது. இதற்கிடையில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, 'நாபார்டு' என்று அழைக்கப்படும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் வரண்முறைகளின்படி 30—6—1985 ஆம் நாளிலிருந்து நலிவுற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது. தேசிய வங்கியின் வரண்முறைகளின்படி, கூட்டுறவு ஆண்டின் இறுதியில் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியின் சொந்த நிதியாதாரங்கள் சந்தேக மற்றும் வராக் கடன்கள் (Doubtful and bad debts) திரண்ட நட்டம் மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட தவணை தவறிய கடன்கள், ஆகியவற்றின் மூலம் 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிக்கப்பட்டிருக்குமானால், அந்த வங்கி நலிவுற்ற மத்திய கூட்டுறவு வங்கியாக வகைப்படுத்தப்படும். இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நலிவுற்ற மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பட்டியலிலிருந்து விடுவிக்க அதனை னரமைப்பு திட்டத்திற்குட்படுத்தப்பட்டது (Rehabititation programme). ஏற்கனவே நலிவுற்ற நிலையில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் ஆஸ்தி பொறுப்புகளை புதிய மாவட்டங்களில் பிரத்தியேக மத்தியக் கூட்டுறவு வங்கி தோற்றுவிப்பதற்காக பிரிவினை செய்தால் அவ்வங்கி

மேலும் வலுவிழந்துவிடுவதுடன், புதிதாக தோற்றுவிக்கப்பட வுள்ள புதிய மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் தன்னிறைவற்ற நிலையில், அவை தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்தையே பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படும். மேலும், தாய் வங்கியே தன்னிறைவற்ற நிலையில் உள்ளபோது, அதன் சேய்களான புதிய வங்கிகளும், தன்னிறைவற்ற நிலையிலேயே அமையு மாதலால், இவ்வங்கிகள் வங்கியியல் பணிகளை மேற்கொள் வதற்கான உரிமத்தை இந்திய தலைமை வங்கியிடம் இருந்து பெறுவதற்கான வாய்ப்பில்லை. எனவே, புதிய மாவட்டங் களுக்கான பிரத்தியேக மத்தியக் கூட்டுறவு வங்கிகளை உட னடியாக ஏற்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டது.

இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி புன ரமைப்புத் திட்டச் செயல்பாடுகள் பதிவாளராலும், அரசாலும் முறையே அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும் மாநில அளவிலான திறனாய்வுக் குழுக்களின் தீவிர கண்காணிப்பின் விளைவாக நலி வுற்ற வங்கிகள் பட்டியலில் இருந்து தேசிய வங்கி அறிக்கையின் அடிப்படையில் அவ்வங்கி நீக்கப்பட்டுவிட்டதாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, அதனது 24—5—1989-ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தது. இதற்கிடையில் இராமநாத புரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் ஆஸ்திப் பொறுப்புக் களை மூன்று மாவட்டங்களுக்கான மத்தியக் கூட்டுறவு வங்கி களுக்கிடையே பகிர்மானம் செய்வதற்கான மாதிரி முன் மொழிவுகள் (Draft proposals) பெறப்பட்டு அதன் மீது தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் கருத்துக்கள் பிப்ரவரி 1990ல் பெறப்பட்டன.

மேலும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 91-ன் கீழ் ஆஸ்திப் பொறுப்புக்களை காப்பு செய்யப்பட்ட வங்கிகளுக் கிடையே மாற்றம் செய்வதற்கான எழுத்து மூலமான அனுமதியை வழங்கும்படி இந்திய தலைமை வங்கிக்கு (Reserve Bank of India) கோரிக்கை தனியே அனுப்பியபின், இந்திய தலைமை வங்கியின் ஒப்பளிப்பை எதிர்நோக்கி புதிய சங்கங்கள் பதிவு செய்யப்படும். ஆனால் இந்திய தலைமை வங்கியின் ஒப்பளிப்பு மற்றும் உரிமம், கிடைக்கப் பெற்ற பின்னர்தான் ஆஸ்திப் பொறுப்புகள் மாற்றம் செய்தல், வங்கியியல் பணிகள் முதலி யன மேற்கொள்ள இயலும்.

தற்சமயம் இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராசர் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படும் கூட் டுறவுச் சங்கங்களுக்கான கடன் தேவைகளை நிறைவு செய்து வருகிறது. கடந்த 1989-90ஆம் நிதியாண்டில் இவ்வங்கி மாவட்ட வாரியாக வழங்கியுள்ள கடன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்).

வரிசை எண்ணும் கடன் வகையும்.	இராமநாதபுரம்.	பசும்பொன் தேவர் திருமகன்.	காமராசர்.
(1)	(2)	(3)	(4)
1. குறுகிய காலக் கடன்	153.46	280.50	430.93
2. மத்திய காலக் கடன்	155.00	135.25	195.73
3. நகைக் கடன்—			
(அ) கிளைகள் மூலமாக	145.85	127.65	273.22
(ஆ) சங்கங்கள் மூலமாக	315.42	413.89	1013.14
4. வேளாண்மை சாராக் கடன் (சிறு மற்றும் குடிசைத் தொழில்கள்)	1.34	4.23	8.33

மேலே குறிப்பிட்ட புள்ளி விவரங்களிலிருந்து ஏனைய இரு மாவட்டங்களைவிட காமராஜர் மாவட்டத்திற்கு விவசாயம் மற்றும் தொழில்களுக்கு கடன்கள் அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளது என்றும், எந்த ஒரு மாவட்டத்திலும் விவசாயக் கடன்கள் வழங்குவது பாதிக்கப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விவர அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இராமநாதபுரம் 1984-லேயே பிரிக்கப்பட்டது. 6 ஆண்டுக் காலமாக அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக மத்திய வங்கி ஏற்படுத்தப்படவில்லை. குறிப்பிட்ட இந்த அறிக்கையில், 1984-ஆம் ஆண்டிலே இராமநாதபுரம் மாவட்ட மத்திய வங்கி நலிவுற்ற வங்கியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ரிசர்வ் வங்கியின் சார்பாக 1989ல் நலிவுற்ற வங்கியிலிருந்து அது நீக்கப்பட்டுவிட்டது. இப்போது தனித்து இயங்கலாம் என்று ரிசர்வ் வங்கி உத்தரவு வழங்கியிருக்கிறது. கடந்த ஓராண்டுக் காலமாக அரசு அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கால் தனித்து இயங்குகிற வாய்ப்பு காமராசர் மாவட்டத்திற்குக் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற முறை இந்த அவையில் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் 1984-ஆம் ஆண்டு மூன்றாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் எதிர்

பாராத வகையில் 30—6—1985 ஆம் தேதி அன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நலிந்த வங்கி பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டது. அதற்குப் பின்னாலே அந்த, நலிவினை நீக்குகின்ற வகையில் மாநில அளவிலேயும் மாவட்ட அளவிலேயும் குழு நியமிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் மத்திய கூட்டுறவு வங்கி வைக்கப்பட்டது. தீவிர கண்காணிப்பின் காரணமாக 24–5–1989 அன்று நலிந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுவிட்டதாக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி அறிவித்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து தொடர் நடவடிக்கையாக மத்திய வங்கியினுடைய நிதி ஆதாரங்களைப் பிரித்துத் தருவதற்கு இந்தியத் தலைமை வங்கியினுடைய அனுமதி தேவைப்படுகின்ற காரணத்தால் அந்த அனுமதி கிடைத்த பின்னாலேதான் பதிவு மற்றைய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற நிலைமை காரணமாக அந்த அனுமதியை எதிர்நோக்கி அரசு இருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப, அரசு இன்னும் அதில் தீவிரம் காட்டி, தலைமை வங்கியிடமிருந்து அனுமதி பெற்று, விரைவில் தனித் தனி கூட்டுறவு மத்திய வங்கிகள் ஆரம்பிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-50 மணி

திரு. வே. தங்கபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, காமராசர் மாவட்டத்தினுடைய அசெட்ஸ் மத்திய வங்கியிலே 60 சதவிகிதம் இருக்கிறது. தேவர் திருமகனார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், காமராசர் மாவட்டம் மத்திய வங்கிகள் தனித் தனியாக இயங்க வையபிளாக இருக்கிறதென்ற அடிப்படையிலே அரசு அதிகாரிகள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் பல முறை உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, காமராசர் மாவட்டத்தினுடைய பங்கு அதிகமாக இருந்தாலும், அவர்கள் கடன் பட்டிருக்கும் பங்கும் அதிகமாக இருக்கிறதென்ற விவரம் என்னிடத்தில் இருக்கிறது. எது எப்படி இருந்தாலும்கூட, 3 மாவட்டத் தலைநகரங்களிலும் கூட்டுறவு மத்திய வங்கிகள் ஏற்பட வேண்டுமென்பதில் அரசு அக்கறையோடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை மதிக்கும் வகையில் அரசு இன்னும் தீவிரம் காட்டி விரைவில் அங்கே கூட்டுறவு மத்திய வங்கிகள் ஏற்பட அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.